www.Padasalai.Net www.CBSEtips.in

10 - STD

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

பதிவு எண்.

## தமிழ்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையை தேர்ந்தெடு** **(9x1=9)**

1. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே.
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்
2. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ______
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
3. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ______
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. "செல்வத்தின் பயனே ஈதல்
   துய்ப்பேம் என்னோ தப்புந பலவே" - என்ற பாடலினை எழுதியவர் ______
   அ) நக்கீரனார் ஆ) ஔவையார் இ) பாரதியார் ஈ) திருமூலர்
5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ______
   அ) அகவற்பா அ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
6. மேன்மை தரும் அறம் என்பது ______
   அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ்கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (7,8) விடை தருக.

"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்"

7. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?
8. காருகர் ______ பொருள் தருக.
9. இதில் அமைந்த எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

**II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.** **(5x2=10)**

10. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க
    அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி இலக்கிய அறிவு பெற்றார்
    ஆ) 1906 -ஆம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைக் தொடங்கினார்.
11. பாசவர், வாசவர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
12. "பாடாண்திணை" பிரித்து எழுதி விளக்குக?
13. பா எத்தனை வகைப்படும்? அவை? யாவை?
14. "கல்லார், அறிவிலார் - இரு சொற்களை அசை பிரித்து வாய்ப்பாடு எழுதுக?
15. குறிப்பு வரைக - "அவையம்"
16. காலக் கழுதை கட்டெறும்பானதும் - கவிஞர் செய்வது யாது?



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

**III. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளி. (வினா எண். 17 கட்டாயம்) (3x3=9)**

17. அடிபிறழாமல் எழுதுக.
 **"தூசும் துகிரும்"** - எனத் தொடங்கும் சிலப்பிகாரப் பாடல்
18. வெண்பாவின் பொது இலக்கணம் எழுதுக?
19. முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?
20. போர் அறம் பற்றி விளக்குக?
21. வாகை, கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை விளக்குக?
22. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக?
23. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக?
 அ) திருச்சிராப்பள்ளி ஆ) நாகப்பட்டினம் இ) உதகமண்டலம்

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி. (2x5=10)**

24. மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக?
25. "காலக்கணிதம்" கவிதையால் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகள் ஐந்தினை எழுதுக?
26. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக?
27. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக?



**V. விரிவான விடையளி. (2x6=12)**

28. ராஜம்கிருஷ்ணன் குறித்தும் அவரது புதினங்கள் குறித்தும் எழுதுக?
 (அல்லது)
 சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
29. சிலப்பதிகார மருவூர்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
 (அல்லது)
 நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவர் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner